சின்ன சின்னதாய்

➤ விநாயகா மிஷன் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் மூலம் "அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் சிறந்து விளங்கும் கல்லூரி" என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

சேலம் விநாயகா மிஷன் பல்கலைக் கழக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு விருது

■ சேலம்

விநாயகா மிஷன் பல்கலைக் கழக விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு தனியார் தொலைக்காட்சி நிறுவனம் மூலம் "அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் சிறந்து விளங்கும் கல்லூரி" என்ற விருது வழங்கப்பட்டுள்ளது.

தமிழகத்தின் முன்னணி தனியார் தொலைக்காட்சி நிறுவனம் சேலத்தில் கல்வித்துறையில் சிறந்து விளங்குபவர்களை அங்கீகரிக்கும் விதமாக விருது வழங்கும் நிகழ்ச்சியை நடத்தியது. இந்நிகழ்ச்சியில் பல்வேறு துறை சார்ந்த வல்லுநர்கள், கல்வியாளர்கள் பங்கேற்றனர். விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தலைமை வகித்தார். சிறப்பு அழைப்பாளராக தமிழக அரசின் மருத்துவ மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இயக்குநர் ஜெயராமமூர்த்தி பங்கேற்றார்.

விநாயகா மிஷன் பல்கலைக் கழகத்திற்கு உட்பட்ட விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரிக்கு "அலைடு ஹெல்த் சயின்ஸ் துறையில் சிறந்து விளங்கும் கல்லூரி" என்ற விருது வழங்கப்பட்டது. விருதை துறையின் டீன் பேராசிரியர் செந்தில்குமார் பெற்றுக் கொண்டார்.

இதுகுறித்து டீன் செந்தில்குமார் கூறும்போது, 23 ஆண்டுகால கல்வி சேவையில் எங்களிடம் பயிலும் மாணவர்களின் நலனை மட்டுமே கருத்தில் கொண்டு பல்வேறு புதுமையான நடவடிக்கைகளை மையப்படுத்தி செயலாற்றி வருகிறோம். குறிப்பாக தொழில்நுட்பம் சார்ந்த கற்றல் மற்றும் கற்பித்தல் செயல்பாடுகள், சிறந்த உள் கட்டமைப்பு, மாணவர்களுக்கான வேலை வாய்ப்பு போன்ற எண்ணற்ற மாணவர் நலன் சார்ந்த பல்வேறு நடவடிக்கைகளை சிறப்பாக மேற்கொண்டு வருகிறோம். இதன்மூலம் எங்கள் மாணவர்களின் எதிர்காலம் பிரகாசிப்பதோடு அவர்கள் வருங்கால சவால்களை எதிர்கொள்ளவும் வழி வகுக்கிறது. இதன் அடிப்படையில் எங்கள் கல்லூரிக்கு இவ்விருது வழங்கப்பட்டுள்ளது, என்றார்.

இவ்விருதை பெறுவதற்கு சிறந்த பங்களிப்பாற்றிய துறையின் டீனுக்கு பல்கலைக் கழகத்தின் வேந்தர் கணேசன் மற்றும் துணைத் தலைவர் அனுராதா கணேசன், பேராசிரியர்கள் பாராட்டினர்.

மத்திய அமைச்சரைக் கண்டித்து திமுக-வினர் ஆர்ப்பாட்டம்

■ சேலம்

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானைக் கண்டித்து சேலத்தில் திமுக-வினர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

முதல்வர் ஸ்டாலினை, மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதான், அவதூறாக பேசியதாகக் கூறி, தமிழகத்தின் பல்வேறு இடங்களில் திமுக-வினர் நேற்று போராட்டங்களில் ஈடுபட்டனர்.

சேலத்தில், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் எதிரே சாலை சந்திப்பில் மாநகர செயலாளர் ரகுபதி தலைமையில் பெண்கள் சிலர் உள்ளிட்ட திமுக-வினர் 150-க்கும் மேற்பட்டோர் நேற்று திரண்டனர்.

● முதல்வர் ஸ்டாலினை அவதூறாகப் பேசியதாக கூறி, மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானை கண்டித்து சேலம் ஆட்சியர் அலுவலகம் எதிரே ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட திமுகவினர். படம்: எஸ்.குரு பிரசாத்

மத்திய அரசைக் கண்டித்து, எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்த திமுக-வினர், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு, நாவடக்கம் தேவை என்றுகூறி முழக்கங்களை எழுப்பினர்.

மத்திய அரசைக் கண்டித்து, எழுதப்பட்ட வாசகங்கள் அடங்கிய பதாகைகளை வைத்திருந்த திமுக-வினர், மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானுக்கு, நாவடக்கம் தேவை என்றுகூறி முழக்கங்களை எழுப்பினர்.

மத்திய அமைச்சர் தர்மேந்திர பிரதானின் புகைப்படம் அடங்கிய தாளினை கிழித்துப் போட்டு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பின்னர், திடீரென உருவ பொம்மையை எரித்து, போராட்டத்தில் ஈடுபட்டனர். சாலை சந்திப்பில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தால், அப்பகுதியில் போக்குவரத்து சிறிது நேரம் பாதிக்கப்பட்டது.

சேலம் செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோயிலில்

திருப்பணிகளை அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார்

■ சேலம்

சேலம் செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோயிலில், கருவறை, விமானம் உள்ளிட்டவற்றில் கருங்கல் திருப்பணிகள் நேற்று தொடங்கப்பட்டது. இதில் அமைச்சர் ராஜேந்திரன் பங்கேற்று, திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

சேலம் செவ்வாய்பேட்டை யில் உள்ள பிரசித்தி பெற்ற மாரியம்மன் கோயிலில், கும்பாபிஷேக விழா விரைவில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. இதனை முன்னிட்டு கோயிலில், கருவறை, விமானம், அர்த்தமண்டபம் ஆகியவற்றில் கருங்கல் திருப்பணிகள் மேற்கொள்ளப்படுகிறது.

இத்திருப்பணி தொடக்க விழா நேற்று நடைபெற்றது. இதனையொட்டி, கோயிலில் அதிகாலையில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனை நடத்தப்பட்டது. காலை 10.25 மணிக்கு மேல் கணபதி ஹோமம், நவக்கிரக ஹோமம், லட்சுமி ஹோமம் ஆகியவையும், பின்னர் பூர்ணாஹுதி, தீபாராதனை வழிபாடு ஆகியவை நடைபெற்றது.

இதனைத்தொடர்ந்து, நடைபெற்ற திருப்பணிகள் தொடக்க விழாவில், சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் கலந்து கொண்டு, திருப்பணிகளை தொடங்கி வைத்தார்.

● சேலம் செவ்வாய்பேட்டை மாரியம்மன் கோயிலில் திருப்பணிகள் தொடக்க விழா நேற்று நடந்தது. இப்பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் ராஜேந்திரன் தொடங்கி வைத்தார். படம்: எஸ்.குரு பிரசாத்

மருத்துவமனையில் சேர மறுத்த பழங்குடியின கர்ப்பிணி பெண்

சுகாதாரத்துறை முயற்சியால் சுகப்பிரசவம்

■ ஈரோடு

ஈரோடு மாவட்டம் அந்தியூரை அடுத்த பர்கூர் சுற்றுவட்டார வனப்பகுதியில் உள்ள கிராமங்களில் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். பழங்குடியின மக்கள் தங்களுக்கு நோய் பாதிப்பு ஏற்படும் போது, மருத்துவமனைகளை நாடாமல், பாரம்பரிய முறையில் சிகிச்சை எடுத்துக் கொள்வதை வழக்கமாக கொண்டுள்ளனர்.

குறிப்பாக, கர்ப்பிணிப் பெண்கள் மருத்துவமனைகளில் சேர்ந்து சிகிச்சை பெற்று குழந்தை பெறுவதைத் தவிர்த்து, வீட்டிலேயே பிரசவம் பார்த்து வருகின்றனர். இதனால், தாய், சேய் ஆகிய இருவருக்கும் உடல்நலம் பாதிப்புக்குள்ளாகும் நிலை ஏற்பட்டு வந்தது.

இதனைத் தவிர்த்து கர்ப்பிணிப் பெண்களுக்கு உரிய சிகிச்சை அளிக்கும் வகையில், பழங்குடியின மக்களை கண்காணித்து, சுகாதாரத்துறை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இந்த வகையில், பர்கூரை அடுத்த சோழகனை பழங்குடியின கிராமத்தைச் சேர்ந்த ஜோதி என்பவர் கர்ப்பமாய் இருப்பதை அறிந்த பர்கூர் ஆரம்ப சுகாதார நிலைய பணியாளர்கள் அவரது உடல்நலத்தை கண்காணித்து வந்தனர். அவரது பிரசவ தேதி நெருங்கிய நிலையில், மருத்துவமனையில் உள்நோயாளியாக அனுமதிக்க வேண்டும் என சுகாதாரத்துறை பணியாளர்கள் தெரிவித்தனர்.

ஆனால், மருத்துவமனையில் உள்நோயாளியாக சேருவதற்கு விருப்பமில்லாத ஜோதி, தேவர்மலையில் உள்ள தனது தாய் வீட்டுக்குச் சென்று விட்டார். இதையடுத்து காவல்துறையின் உதவியுடன், தேவர்மலைக்குச் சென்ற வட்டார மருத்துவ அலுவலர் மற்றும் சுகாதாரத்துறை அலுவலர்கள் ஜோதிக்கு அறிவுரை கூறினர்.

இதனைத் தொடர்ந்து அந்தியூர் அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக சேர்க்க, அவர் 108 ஆம்புலன்ஸ் வாகனம் மூலம் அனுப்பி வைக்கப்பட்டார்.

நேற்று முன் தினம் இரவு ஜோதிக்கு ஆண் குழந்தை பிறந்துள்ளதாகவும் தாயும் சேயும் நலமாக உள்ளதாகவும் சுகாதாரத்துறையினர் தெரிவித்தனர்.

இதுகுறித்து சுகாதாரத்துறையினர் கூறும்போது, 'கர்ப்பிணிப் பெண்களை அரசு மருத்துவமனையில் சேர்த்து பிரசவம் பார்க்க வேண்டும் என பழங்குடி மக்களிடம் தொடர்ந்து விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம். இதன் மூலம் சிசு மரணத்தை தடுக்கவும், தாய் சேய் நலமுடன் இருக்கவும் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது' என்றனர்.

அரசியல் கட்சிகள், சங்கங்கள், சமூக அமைப்புகள், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் மற்றும் இதர அமைப்புகள் தங்களது செய்தி அறிக்கைகள், நிகழ்ச்சிகள் குறித்த விவரங்களை எங்களது நாளிதழுக்கு மின்னஞ்சல் வழியாக அனுப்பலாம்.

மின்னஞ்சல் முகவரி:
repsalem@hindutamil.co.in

பெருநகர சென்னை மாநகராட்சி
மழைநீர் வடிகால் துறை

ம.நீ.வ.து.ந.க.எண்.பி2/0691/2025 **மின்னணு ஒப்பந்தபுள்ளி அறிவிப்பு (இரு உறை முறை)**

கண்காணிப்பு பொறியாளர் / ம.நீ.வ.து அவர்களால் கீழ்க்கண்ட பணிகளுக்கு மின்னணு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

மண்டலம் 9ல் உள்ள பல்வேறு தெருக்களில் பழைய மழைநீர் வடிகால்வாய் இடித்து புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி மற்றும் புதிய மழைநீர் வடிகால்வாய் அமைக்கும் பணி (7 பணிகள்)	
பணியின் உத்தேச தொகை குறைந்தபட்சம் ரூ.96.37 இலட்சங்கள் முதல் ரூ.169.06 இலட்சங்கள் வரை, முன் வைப்பு தொகை : பணியின் உத்தேச தொகையில் 1%	
ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் மற்றும் நேரம் :	**26.03.2025 அன்று மாலை 3.00 மணி வரை**
ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் மற்றும் நேரம் :	**27.03.2025 அன்று மாலை 3.30 மணி**
மேலும் விவரங்களுக்கு **https://tntenders.gov.in** இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.	

செ.ம.தொ.இ / 947 / ஒப்பந்தப்புள்ளி / 2025 **கண்காணிப்பு பொறியாளர் (ம.நீ.வ.து)**

வருந்துகிறோம்!
இரங்கல்
ஆண்டு நினைவு நாள்

சேலத்தில் நகைக்கடை ஊழியரை தாக்கி கொள்ளை 2 பேர் கைது, 7 பேரை பிடிக்க போலீஸார் தீவிரம்

■ சேலம்

சேலத்தில் நகைக் கடை ஊழியரை தாக்கி தங்க செயினை பறித்த 2 இளைஞர்களை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள 7 பேர் கும்பலை தேடி வருகின்றனர்.

சேலம் வீராணம் அருகே உள்ள எம்.பள்ளிப்பட்டியைச் சேர்ந்தவர் பூபதி (37). இவர் சேலத்தில் உள்ள நகைக் கடையில் வேலை பார்த்து வருகிறார். கடந்த 8-ம் தேதி பணி முடித்து இருசக்கர வாகனத்தில் வீட்டுக்கு புறப்பட்டார். வீராணம் அருகே சென்றபோது, பெட்ரோல் தீர்ந்த நிலையில் வண்டியை தள்ளிக் கொண்டு கோழி பண்ணை பேருந்து நிறுத்தம் அருகே சென்றார்.

அப்போது, அங்கு வந்த கும்பல் பூபதியை தாக்கி விட்டு அவர் அணிந்திருந்த இரண்டரை பவுன் தங்க செயின், செல்போனை பறித்துக் கொண்டு தப்பியது. இதுகுறித்து அவர் வீராணம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீஸார் வழக்குப் பதிவு செய்து அப்பகுதியில் உள்ள சிசிடிவி கேமரா பதிவுகளை ஆய்வு செய்தனர்.

அதில் பூபதியை தாக்கியது 9 பேர் கொண்ட கும்பல் எனத் தெரிந்தது. இதில், வீராணம் வயக்காடு முனியப்பன் கோயில் பகுதியைச் சேர்ந்த சக்திவேல் (23), ராமு (24) ஆகியோரை போலீஸார் கைது செய்தனர். தலைமறைவாக உள்ள 7 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

● திருப்பூர் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநராக பணியாற்றி வந்த இளங்கோவன், நகராட்சி நிர்வாக கூடுதல் இயக்குநராக பதவி உயர்வு பெற்று, சேலம் மாநகராட்சி ஆணையராக நியமிக்கப்பட்டார். அவர் நேற்று சேலம் மாநகராட்சி புதிய ஆணையராக பொறுப்பேற்றுக் கொண்டார்.

இந்து தமிழ் திசை

பொறுப்பல்ல: இந்தச் செய்தித்தாளில் பிரசுரம் ஆகியுள்ள விளம்பரங்களின் அமைப்படியில் செயல்படுமும், அவற்றில் உள்ள தகவல்கள் சரியானவைதானா என்பதை போதுமான அளவு விசாரித்து சரிபார்த்துக்கொள்ளுமாறு வாசகர்கள் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள். விளம்பரங்கள்/ விளம்பரதாரர் / அவர்களின் தயாரிப்புகள் / சேவைகள் போன்றவற்றின் நம்பகத்தன்மைக்கு இந்தச் செய்தித்தாளின் உரிமையாளரும் பதிப்பாளருமான கஸ்தூரி & சன்ஸ் லிமிடெட் / கே.எஸ்.எல். மீடியா லிமிடெட் உத்தரவாதம் அளிக்கவில்லை. இந்தச் செய்தித்தாளில் வெளியாகும் விளம்பரங்களால் ஏதேனும் சேதம் அல்லது இழப்பு ஏற்படும் பட்சத்தில், இந்தச் செய்தித் தாளின்/ மேற்சொன்ன நிறுவனங்களின் உரிமையாளர், பதிப்பாளர், அச்சிடுவோர், ஆசிரியர், இயக்குநர்கள், ஊழியர்கள் ஆகியோர் எந்தச் சூழலிலும் எந்த வகையிலும் அதற்குப் பொறுப்பாகமாட்டார்கள்.

படைப்புகளை அனுப்புவோர் பிரதி எடுத்துவைத்துக்கொண்டு அனுப்பவும். பிரசுரமாகாதவற்றைத் திரும்ப அனுப்ப இயலாது.

பாங்க் ஆப் இந்தியா Bank of India BOI
கோயமுத்தூர் மண்டலம்

அடமானம் வைக்கப்பட்ட தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகளை பொது ஏலத்தில் விடுவதற்கான அறிவிப்பு

கீழே குறிப்பிட்டுள்ள நகைக்கடன் பெற்ற கடன்தாரர்கள், அவர்தம் சட்ட பூர்வ வாரிசுகள், தங்க நகை / ஆபரணம் / காசு ஆகியவற்றின் வணிகத்தில் ஈடுபட்டுள்ள நபர்கள் மற்றும் பொது மக்களுக்கு இதன் மூலம் தெரிவித்துக் கொள்வது யாதெனில் தொடர்ச்சியான நினைவூட்டுகள் / அறிவிப்புகள் ஆகியவை வங்கியால் அனுப்பப்பட்டிருப்பினும், கீழ் குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் வங்கிக்கு வைத்துள்ள நிலுவையைத் திரும்பச் செலுத்தவில்லை.
அவர்கள் தங்களது கடன் கணக்கிற்கெதிராக நிலுவையிலுள்ள அனைத்துத் தொகையையும் (நாளது தேதி வரையான வட்டி மற்றும் பிற அனைத்துக் கட்டணங்கள், பொறுப்புகள் / செலவினங்கள் உள்ளிட்டவை) **26.03.2025** க்குள் செலுத்தத் தவறினால் அவர்கள் அடமானம் வைத்துள்ள தங்க நகைகள் / ஆபரணங்கள் / காசுகள் ஆகியவை வங்கி வளாகத்தில் **27.03.2025 அன்று காலை 11.00 முதல் பிற்பகல் 3.00 மணி வரை** பொது ஏலத்தில் விடப்படும் என்ற அறிவிப்பு இதன் மூலம் வெளியிடப்படுகிறது. இதனால் தொடர்புடைய கடன்தாரர்களுக்கு ஏற்படும் எவ்வித இடைஞ்சல்களுக்கும், செலவினங்களுக்கும் வங்கி எவ்விதத்திலும் பொறுப்பேற்காது மற்றும் இவ்விஷயம் தொடர்பாக எந்த ஒரு கடன்தாரரிடமிருந்து வரும் எந்த ஒரு கோரிக்கையும், குற்றச்சாட்டும் வங்கியால் நிராகரிக்கப்படும்.
இந்த ஏலத்தில் கலந்துகொள்ள விரும்பும் நபர்கள் ரூ.500/– ஐ குறிப்பிட்ட நாளில் குறிப்பிட்ட நேரத்திற்கு முன்னர் கிளை மேலாளரிடம் வைப்புத் தொகையாகச் செலுத்திவிடவேண்டும். இறுதி ஏலத்தில் பங்கேற்கும் நபர்கள் ஏலம் எடுத்த 48 மணி நேரத்திற்குள் ஏலத்தொகை முழுவதையும் வங்கிக்குச் செலுத்தாவிடில், அவர் வங்கிக்குச் செலுத்தியுள்ள வைப்புத் தொகை வங்கியால் திரும்பத்தரப்படமாட்டாது. வங்கி, ஏலத்தில் கிடைக்கும் தொகை போதுமானதாக இல்லை எனவோ அன்றிக்குறைவானது எனவோ கருதினால் எந்த ஒரு காரணமும் காட்டாது ஏலத்தை ரத்து செய்ய உரிமையுடையதாகும். மேலும் தேவையெனில் வங்கி மேலே சொல்லப்பட்ட ஏல அட்டவணையில் குறிப்பிட்ட தேதி, நேரத்தை மாற்றவோ அல்லது எந்த ஒரு காரணமும் காட்டாது அதனை ரத்து செய்யவும் உரிமையுடையது.

ஆலப்பட்டி கிளை

வ.எண்.	கணக்கு எண்கள்.	கடன்தாரரின் பெயர்	முகவரி	மொத்த எடை கிராம்
1	817077610026158	மாரியப்பன்.R	த/பெ. ரங்கன், எண்.1/321, வேலகலஹள்ளி, கிருஷ்ணகிரி – 635 122	7.80

தேதி : 07.03.2025 **மண்டல மேலாளர்**
இடம் : கோயமுத்தூர் **பேங்க் ஆப் இந்தியா**

VISTAAR FINANCE
விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்
பதிவு அலுவலகம்: மனை எண். 59 & 60- 23, 22வது குறுக்கு, 29வது பிரதான, BTM லேஅவுட் ஸ்டேஜ் 2, பெங்களூர்-560076. www.vistaarfinance.com

இணைப்பு - IV [விதி - 8(1) பார்க்கவும்]

சுவாதீன அறிவிப்பு (அசையா சொத்திற்காக)

விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-ன் அதிகாரபூர்வ அதிகாரியாக கீழே கையொப்பமிட்டுள்ளவர், 2002-ம் ஆண்டு நிதி சொத்துக்களை சீரமைத்தல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் கடனீட்டுச் சொத்துக்கள் மீதான உரிமை அமலாக்கச் சட்டம் பிரிவு 13(12)-ன் கீழும் மற்றும் அதற்குத் தொடர்புடைய 2002-ம் ஆண்டு கடனீட்டுச் சொத்து மீதான உரிமை (அமலாக்கம்) சட்டம், விதி 3-ன் கீழும் தமக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தை பயன்படுத்தி **கடன்தாரர்(கள்) திரு/திருமதி. கோபால்சாமி கண்ணன் & திரு/திருமதி. பழனிசாமி நல்லப்பன் & திரு/திருமதி. காசி சுப்பிரமணி,** ஆகியோருக்கு **11.12.2024 தேதியிட்ட கோரிக்கை அறிவிப்பினை** அனுப்பி **கடன் கணக்கு எண். 0074SBML02219**-க்கு எதிரான **09.12.2024** அன்றைய தேதியில் நிலுவை தொகை **ரூ.20,99,970.54 (ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மற்றும் பைசா ஐம்பத்தி நான்கு மட்டும்)** அத்துடன் மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் இதர உண்மையான தொகை வரை அறிவிப்பு கிடைத்த 60 நாட்களுக்குள் செலுத்துமாறு கோரியிருந்தார்.

கடன்தாரர்(கள்) பாக்கித்தொகையை திரும்ப செலுத்த தவறிவிட்டபடியால், கடன்தாரர்(கள்) மற்றும் பொதுமக்களுக்கு இதன் மூலம் அறிவிப்பதாவது கீழ்குறிப்பிட்ட பாதுகாப்பு நலன் (அமலாக்கம்) விதிகள், 2002-ன் விதி 8 உடன் சட்டத்தின் பிரிவு 13-ன் துணைப்பிரிவு (4)-ன்கீழ் அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி கீழே கையொப்பமிட்டுள்ளவர் கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்தினை **07.03.2025** தேதியன்று **சிம்பொலிக் சுவாதீனம்** செய்துள்ளார்.

கடன்தாரர்(கள்)-க்கு குறிப்பாகவும் பொதுமக்களுக்கு பொதுவாகவும் இதன் மூலம் எச்சரிக்கப்படுவது யாதெனில் மேற்படி சுவாதீனமான சொத்து விஷயத்தில் எவரும் எந்தவித பேரமும் வைத்துக் கொள்ளக்கூடாது. மீறி வைத்துக் கொண்டால் அது விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-க்கு செலுத்த வேண்டிய **09.12.2024** அன்றைய தேதியில் நிலுவை தொகை **ரூ.20,99,970.54 (ரூபாய் இருபது இலட்சத்து தொண்ணூற்றி ஒன்பதாயிரத்து தொள்ளாயிரத்து எழுபது மற்றும் பைசா ஐம்பத்தி நான்கு மட்டும்)** அத்துடன் மேலும் வட்டி மற்றும் மற்ற கட்டணங்கள் இதர உண்மையான தொகை வரை சேர்த்து செலுத்துவதற்கு கட்டுபட்டதாகும்.

கடனுக்கு ஈடாக அடமானம் வைக்கப்பட்டுள்ள சொத்தினை மீட்பதற்குரிய கால வரம்பு குறித்து சட்ட பிரிவு 13-ன் துணைபிரிவு (8)ன்படி கடன்தாரர்களின் கவனம் ஈர்க்கப்படுகிறது.

அசையா சொத்தின் விவரம் :

அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த அனைத்து பகுதிகளும், பதிவு மாவட்டம் : சேலம் கிழக்கு பதிவு மாவட்டம், தாடாகப்பட்டி சார் பதிவு மாவட்டம், சேலம் தாலுகா, அன்னதானபட்டி கிராமம், சர்வே எண்.(கள்) பழைய எண். : 109/2, 109/2 பகுதி புதிய எண்.34-க்குட்பட்டது. சொத்தின் அளவுகள் 390 சதுர. நகராட்சி நிலம் சர்வே எண். வார்டு W, பிளாக் 33, டி.எஸ்.எண்.34. **எல்லைகள் :** வடக்கில் : 3 அடி அகல கிழக்கு மேற்கு பாதை, தெற்கில் : இளங்கோ, ரவிகுமார் சொத்து, கிழக்கில் : ஜெயபால் சொத்து, மேற்கில் : 15 அடி அகல தெற்கு வடக்கு சாலை. அளவுகள் கிழக்கு மேற்கு வடக்கு பக்கம் 30 அடி, தெற்கு பக்கம் 30 அடி, தெற்கு வடக்கு கிழக்கு பக்கம் 13 அடி, மேற்கு பக்கம் 13 அடி. மொத்தம் 390 சதுர அடி நிலம் மற்றும் கட்டிடம் அடிப்படை உரிமைகள் இதர.

நாள் : 07.03.2025 **அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி**
இடம் : சேலம் **விஸ்தார் ஃபைனான்சியல் சர்வீஸ் பிரைவேட் லிமிடெட்-க்காக**

ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க்
(ஒரு அட்டவணை கமர்ஷியல் பேங்க்)
பதிவு அலுவலகம்: தி ஃபர்வே, தரை & முதல் தளம், சர்வே எண்.10/1, 11/2 & 12/2B, ஆஃப் டாம்லூர், கொரமங்களம் உள் வட்ட சாலை, EGL பிசினஸ் பார்க் அடுத்து, செல்லகாட்டா, பெங்களூர்-560071. கிளை அலுவலகம் முகவரி : எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.

மின்-ஏலம் அறிவிப்பு

2002-ம் ஆண்டு (SARFAESI ACT) கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் மறுகட்டமைப்பு செய்தல் மற்றும் பாதுகாப்பு வட்டிச் சட்டத்தின் அமலாக்கம் மற்றும் 2002-ம் ஆண்டு (அமலாக்கம்) பாதுகாப்பு வட்டி விதிகள் 8(6) மற்றும் 9-ன் கீழ் மின்-ஏலம் மூலம் விற்பனை செய்வதற்கான பொது அறிவிப்பு.

கீழே கையொப்பமிட்ட **ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட்-ன்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி ஆனவர் SARFAESI சட்டம் பிரிவு 13(4)ன் கீழ், கீழே விவரிக்கப்பட்டுள்ள சொத்துக்களை தனது சுவாதீனத்தில் எடுத்துக்கொண்டார். இதன் மூலம் கடன்தாரர் குறிப்பாகவும், பொது மக்களுக்கும் அறிவிப்பதாவது, கீழ்க்கண்ட நபர்களிடமிருந்து, வங்கிக்கு செலுத்த வேண்டிய கடன் தொகையை வசூலிக்கும் பொருட்டு, கீழ்குறிப்பிட்ட கணக்குகளின் அடமான சொத்துக்களை **"உள்ள இடத்தில் உள்ளவாறு" மற்றும் "உள்ளது உள்ளவாறு"** எனும் அடிப்படையில் **மின் ஏலத்தின் (e-auction)** மூலம் விதிகள் மற்றும் நிபந்தனைகளின்படி கீழ்குறிப்பிட்ட நாட்களில் விற்பனை செய்ய முடிவு செய்யப்பட்டுள்ளது.

வ. எண்.	கடன் கணக்கு எண்.	உண்மையான கடன்தாரர்/ இணை-கடன்தாரர்/ ஜாமீன்தாரர் பெயர்	13-2 அறிவிப்பு நாள்	சுவாதீன நாள்	09.03.2025-ன்படி தற்போதைய நிலுவை தொகை	சொத்தினை பார்வையிடும் நாள் & நேரம்	ரிசர்வ் தொகை INR-ல்	முன்வைப்பு தொகை (EMD) INR-ல்	மின்-ஏலம் நாள் மற்றும் நேரம்	ஏலம் சமர்ப்பிக்கும் கடைசி நாள், நேரம் மற்றும் இடம்
1	33309440000427	1) திருமதி. ஆனந்தி மாரிமுத்து, உரிமையாளர், Ananthi Milk, 2) திரு. மாரிமுத்து, 3) திரு. சீனிவாசன் மாரிமுத்து	16-05-2023	17-12-2024	ரூ.6,83,140.70 (ரூபாய் ஆறு இலட்சத்து எண்பத்தி மூன்றாயிரத்து நூற்றி நாற்பது மற்றும் பைசா ஏழுபது மட்டும்)	01.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.17,90,000/- (ரூபாய் பதினெழு இலட்சத்து தொண்ணூறு ஆயிரம் மட்டும்)	ரூ.1,79,000/- (ரூபாய் ஒரு இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயிரம் மட்டும்)	15.04.2025 நேரம்: 03.00 PM	11.04.2025, மாலை 5.00 மணி வரை, ஜனா ஸ்மால் ஃபைனான்ஸ் பேங்க் லிமிடெட், எண்.259/4/129, சாரதா காலேஜ் சாலை, அண்ணா சாலை எதிரில், அழகாபுரம், சுவர்ணாபுரி, சேலம் - 636016.
	பாதுகாப்பு சொத்துக்கள் விவரம் : அசையா சொத்து மற்றும் அதனை சார்ந்த பகுதிகளும், தமிழ்நாடு, சேலம் மாவட்டம், சேலம் கிழக்கு RD, கங்கவள்ளி சார் RD, கடம்பூர் கிராமம், கங்கவள்ளி தாலுகா, பழைய சர்வே எண். 128/1ஏ பட்டா எண். 937-ன்படி புதிய சர்வே எண். 459/5 தொடர்பான நிலம் மற்றும் கட்டிடம் மற்றும் பின்வரும் **எல்லைகள் :** ஸ்வர்ணா ரெட்டியார் வீட்டிற்கு **கிழக்கே,** ஸ்வர்ணா ரெட்டியார் வீட்டிற்கு **மேற்கே,** சாலைக்கு **தெற்கே,** ஸ்வர்ணா ரெட்டியார் அவர்களின் சொத்திற்கு **வடக்கே.** அளவுகள் கிழக்கு-மேற்கு பக்கம் 31 1/2 அடி, வடக்கு பக்கம் 33 1/4 அடி, வடக்கு-தெற்கு மேற்கு பக்கம் 77 1/2 அடி, கிழக்கு பக்கம் 71 அடி. மொத்தம் 2475 சதுர அடி முழு நிலம் மற்றும் அனைத்து பாதை உரிமைகள் மற்றும் அதனுடன் இணைக்கப்பட்ட அடிப்படை உரிமைகள்.								
2	46038640001118	1) M/s. Kumaran and Co., அதன் பிரதிநிதி உரிமையாளர் திரு. சரவணன் முருகேசன், 2) திரு. சரவணன் முருகேசன், 3) திருமதி. ஜெயந்தி சரவணன்	18-01-2024	23-12-2024	ரூ.76,42,667.00 (ரூபாய் எழுபத்தி ஆறு இலட்சத்து நாற்பத்தி இரண்டாயிரத்து அறுநூற்றி அறுபத்தி ஏழு மட்டும்)	01.04.2025 காலை 9.30 மணிமுதல் மாலை 5.00 மணிவரை	ரூ.53,79,000/- (ரூபாய் ஐம்பத்தி மூன்று இலட்சத்து எழுபத்தி ஒன்பதாயி